S. Aravinthan

யா/அல்வாய்

# ஸ்ரீலங்கா வித்தியாசாலை

# வெள்ளி விழா மலர்

1980

வெள்ளி விழாவுக்கு எமது நல்லாசிகள் :

# DEC

"கல்விக்கழகு கசடறக் கற்றல்"

பாலர் வகுப்பும், 1ம், 2ம், 3ம், 4ம், 5ம், 6ம், 7ம், 8ம், 9ம், வகுப்புகளும்,

**G. C. E. (O/L), G. C. E. (A/L)**

வகுப்புக்களும், திறமைமிக்க, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின்
போதனையுடன் இயங்கி வருவதில்

இன்று முன்னணி வகிக்கும்

ஒரே கல்வி நிலையம்

# டார்வின் எடியூகேசன் சென்ரர்

இயக்குநர் : கா. யோகராசா
நாவலடி, அல்வாய் வடக்கு,
**அல்வாய்.**

---

எமது நல்வாழ்த்துக்கள் :

வளர்ச்சிப் பாதையில், புதிய உற்பத்தி. விஞ்ஞான முறையில் கைபடாமல்
தயாரிக்கப்பட்டது.

## என். எம். வெல்ல ரொபி

## NM JAGGERY TOFFEE

சுத்தமான, தரமிக்க பனம் வெல்லம் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**இன்றே நாடுங்கள்**

↓

# ராஜா தெங்கு பனம் பொருள் உற்பத்தி தொழிற்சாலை

தொழிலதிபர் : சோ. சிவராசா
**அல்வாய் வடக்கு, அல்வாய்.**


# காணிக்கையாகச் சூட்டுகின்றோம்.

வித்தியாசாலை வெள்ளி விழாவின் கன்னி முயற்சி இம்மலர். மிகமிகக் குறுகிய கால முயற்சியின் பெறுபேறும் இம்மலர் மலர்கின்றது. வண்டமிழ் மொழியிலான வாழ்த்துச் செய்திகள்; கருத்துக்கினிய கட்டுரைக் கருவூலங்கள்; கல்விச்சாலையின் கவினுறும் காதை; கண்கவர் நிழற்படக் காட்சிகள்; புந்திக்கு விருந்தூட்டும் புதிய மலர்க்கவிகள்; சேக்கிழாரின் சில சிந்தனைகள்; வடக்கின் வரப்பிரசாதம் ஆகிய உள்ளத்திற்கு உவகையூட்டும் விடயங்களை உள்ளடக்கி பல அம்சங்களுடன், இதழ் விரித்து, மணம் பரப்பி மலர்கின்றது இம்மலர்.

எங்கள் வித்தியாசாலையாகிய ஸ்ரீ லங்கா தேவியின் பாத கமலங்களிலே இம்மலரினைச் சூட்டி மகிழ்கின்றோம்.

வணக்கம்.

மலர் ஆசிரியர்கள்



உ

# வித்தியாசாலைக் கீதம்

அன்னையைப் போற்றிடுவோம்—கல்வி
அறிவினை யூட்டும் ஸ்ரீலங்காஎனும்
அன்னையைப் போற்றிடுவோம்.

அல்வா யூரிதன் அணிகலமாவாள்
அருந்தமிழ் வளரும் விளைநிலமாவாள்
தொல்புகழ் சைவக் கோயிலுமாவாள்
துணிவினை யூட்டும் தாயிவளாவாள்
— அன்னை

"கற்றனைத் தூறும் அறிவெனும்" நெறியைக்
காட்டிடும் தாயைக் கைதொழுவோமே
பற்பல கலைகள் பயிற்றிடும்மாதா
பாத பங்கயங்கள் பணிந்திடுவோமே
— அன்னை


விஞ்ஞான உண்மை விளங்கிடவைப்பாள்
வேதநூற் கருத்தும் துலங்கிடச்செய்வாள்
மெய்ஞ்ஞான விளக்காய் மேதினியெங்கும்
வித்தைகள் பரப்பிப் பொற்புறச்செய்வாள்
— அன்னை

பரதமும் இசையும் பற்பலதொழிலும்
பண்பு பண்பாடும் பக்தியும்நெறியும்
திறமையும் செயலும் செல்வமும்புகழும்
சேர்த்திடும் தாயைத் தினம்தொழுவோமே
— அன்னை

ஆக்கம்
ம. முருகேசன்
ஆசிரியர்.







# வெள்ளி விழாக்காணும் எமது வித்தியாசாலையின் பொலிவுறு தோற்றம்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — வள்ளுவர்ப்பெருந்தகை


மலர் ஆசிரியர்கள் :
ம. முருகேசன் ஆசிரியர்
கா. புஷ்பராணி ஆசிரியை

யாழ் பல்கலைக்கழகம்
துணை வேந்தர்
**கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள்**
**வழங்கிய**

# ஆசிச் செய்தி.

அல்வாய், சைவப் பெருமக்கள் வாழும் சிறந்த கிராமமாகும். சைவக் கோயில்களும், சைவ நிறுவனங்களும் இக் கிராமத்தை அணிசெய்கின்றன இக் கிராமத்தின் மத்தியில் அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா சைவ வித்தியாசாலை அமைந்துள்ளது.

அல்வாய்ப் பெரியார் கவிஞர் மு. செல்லையாவும், சமூகத் தொண்டர் ஆசிரியர் திரு. க. முருகேசுவும் இப் பாடசாலையை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபித்தனர். இந்த நிறுவனம் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி இன்று சைவமும், தமிழும் வளர்த்து வருகிறது. பிறமதப் பாடசாலைகளுடன் எதிர்நீச்சலடித்து வெற்றி பெற்று இன்று இந்நிறுவனம் வெள்ளி விழாக் கொண்டாடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இத்தாபனம் மேலும் வளர்ந்து அரும்பணி புரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# எங்கள் அதிபர்

எழுதியவர்:-

செல்வி. கா. புஷ்பராணி ஆசிரியை

கண்களில் கனல் பொங்கும் பார்வை: எனினும் கள்ளமறியா உள்ளம். வார்த்தைகளில் வன்மை தொனிக்கும்: எனினும் வஞ்சனை அற்ற நெஞ்சம் பதவியில் பாடசாலை அதிபர்: பார்வையிலோ எளிமையான தோற்றம் இத்தனையும் கொண்டவர் தான் எங்கள் அதிபர்.


இன்று எமது பாடசாலைக்கு வெள்ளிவிழா. கூடவே அது ஒரு சமூகத்தின் வளர்ச்சியை எடுத்தியம்பும் பெருவிழா. இப்பெரு விழாவில் இவரது பங்களிப்பும் சமூகசேவையில் இவரது திறனும் இச்சந்தர்பத்தில் நினைவு கொள்ளற் பாலது.

பாடசாலை வேலைகள் மட்டுமன்றி புறவேலைகளிலும் இக்கிராம மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுச் சிறந்த சேவையை நல்கியவர்.

இலக்கியத்துறையில் நல்ல ஆர்வம் கொண்டவர் அவர் சேவை புரிந்த பாடசாலைகளிலிருந்து வெளியான மலர்களிலும் பத்திரிகைகளிலும் உள்ள அவரது ஆக்கங்கள் அவரின் இலக்கிய அறிவுக்கு சில எடுத்துக்காட்டுகள். இவை அனைத்துமே இவர் ஒரு யதார்த்த மனிதன் என்பதற்கு சில சான்றுகள்.

எங்கள் அதிபர் அவர்கள் மென்மேலும் திடமான நெஞ்சோடும் தூய்மையான கடமை உணர்வோடும் இப்பாடசாலை வளர்ச்சியில் தன் எதிர்காலத்தையும் அர்ப்பணிப் பதற்கு ஆண்டவன் "நோயற்ற வாழ்வை" அவர்க்கு நல்க என் பிரார்த்தனைகள்.

நல்லறிவு நற்குணங்கள் நாவன்மை கொண்டவர்
வல்லவர் இலக்கிய வேட்கையு முள்ளவர்
கல்லூரி வளர்ச்சியில் கருத்தாக நிற்பவர்
பல்லாண்டு வாழ்கவே பலசீரும் பெறுகவே.



எங்கள் அதிபர்:

திரு. வே. த. தணிகாசலம்

அவர்கள்

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

## திரு. க. சிவநாதன் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை.

யா / அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலை, தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதை அறிந்து அகம் மிக மகிழ்கின்றேன்.

பெற்றோர், பழைய மாணவர், பாடசாலை நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பிற்கு உதாரணமாக விளங்கும் வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்க வாய்ப்புக் கிடைத்தமைக்கு முதற்கண் நன்றி கூறுகின்றேன்.

1937-ம் ஆண்டில் சைவப்பாடசாலை அமைக்கவிருந்த இவ்வூர் மக்களின் முயற்சி, 1954-ம் ஆண்டிலே கவிஞர் மு செல்லையா, ஆசிரியர் க முருகேசு ஆகியோரின் முயற்சியாலும், மக்களின் ஒத்துழைப்பாலும் இவ்வித்தியாசாலையாக உருவம் பெற்றதென அறிகின்றேன்.

பழைய சைவாலயங்களின் சிறப்பும், தமிழ்ப்பண்பும் தன்னகத்தே கொண்ட இவ்வூரில், கல்விப் பணியினை 25 ஆண்டுகளாகச் சீரிய முறையிலே இப்பாடசாலை ஆற்றிவந்துள்ளது. இப்பாடசாலை தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்திலே இதன் ஸ்தாபகர்கள் தொடக்கம் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறைகாட்டும் பாடசாலை அபிவிருத்திச் சபையினர். பழைய மாணவர்கள் போன்றோர் அனைவரையும் பாராட்டுதல் பொருத்தமுடையதாகும். விநாயகப் பெருமானின் ஆலயங்கள் நான்குதிசையும் புடைசூழ நடுவண் விளங்கும் இவ் வித்தியாசாலை, விநாயகக் கடவுளின் அருளினாலே மென் மேலும் வளர்ந்து கல்விக்குச் சிறப்பான பணியினை ஆற்றவேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

மேலும், வெள்ளிவிழா மலர் வனப்பும், எழிலும்மிக்கதாய் விளங்க வாழ்த்துவதுடன், பருத்தித்துறைக் கல்வி வட்டாரத்தில் தனது பங்கைத் திறம்படச் செய்து, வளர்ந்து வரும் இவ் வித்தியாசாலையின் சேவை, பல்கிப் பெருக மீண்டும் வாழ்த்துகின்றேன்.

★

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம்

கல்வி அதிகாரி

### திரு. க. நவரத்தினம் அவர்கள் வழங்கிய

# வெள்ளி விழா நல்லாசிச் செய்தி.

அல்வாய்ச் சிறீலங்கா வித்தியாலயத்தின் இருபத்தைந்து ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கும் இப் பாடசாலைக்கும் எனது வாழ்த்துச் செய்திகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இந்தப் பிள்ளைகள் இந்துச் சமயச் சூழலிலே கற்கவேண்டும் என்று ஒரு இயக்கத்தையே ஆரம்பித்தார். அவர் அமரர் ஆனபின்பு, அவரின் கொள்கைகளைப் பின்பற்றி வடமாகாணத்தில் பல இந்துப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. திரு ஆறுமுக நாவலரின் கொள்கையினுல் கவரப்பட்ட கவிஞர் மு செல்லையாவும், சமூகத் தொண்டர் திரு க. முருகேசுவும் இப்பாடசாலையை ஆரம்பித்தனர். இந்து சமயத்திற் கொண்ட பற்றினுல் சில வசதிபடைத்த பெரியோர்கள் பாடசாலைகட்டுவதற்கான நிலத்தைக் கொடுத்தனர். ஒரு சிலர் கொடுத்த பண உதவியிருந்தும், ஏழை மக்களின் சிரமதானத் தொண்டினுலும் இப்பாடசாலை கட்டப்பட்டு Hindu Boord இடம் கையளிக்கப் பட்டது.

இன்று இப்பாடசாலை ஆரம்பித்து 25 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. வெள்ளி விழாக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் இப்பாடசாலை மேலும் வளர்ந்து பல அறிஞர்களை உருவாக்க எல்லாம் வல்ல இறைவனின் கருணையை வேண்டி மறுபடியும் என் நல்வாழ்த்துக்களை மனமுவந்து வழங்குகிறேன்.

★

பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர்

# திரு. க. துரைரத்தினம் அவர்கள் வழங்கிய

# நல்லாசிச் செய்தி.

❋

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் வெள்ளி விழா நடைபெறும் இவ்வேளையிலே, அக்காலத்திலே இவ்வித்தியாசாலையின் சுற்றுடலிலே வாழ்ந்த சைவ நன்மக்களின் எண்ணங்கள்—அபிலாஷைகள்—மனக்கண்முன்னே நிழலாடுகின்றன. "தங்கள் பிள்ளைகள் சுதந்திரமாகக் கல்வி கற்கவேண்டும்; அதுவும் சைவப் பாடசாலை ஒன்றமைத்துச் சைவப் பாடசாலையிலே கற்க வேண்டும்" — இது அவர்களது நீண்டகாலக் கனவு என்பதை நாம் அறிவோம்.

இவ்வூர் மக்கள் மனத்திலே முளையிட்டெழுந்து வளர்ந்து வந்த இலட்சிய வேட்கை, 1955-ம் ஆண்டிலே இப்பாடசாலையாக உருப்பெற்று, இன்று வெள்ளி விழாக் காணும் அளவிற்குத் துரித நடைபோட்டுப் "பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தது போல" நன்முறையிலே வளர்ந்து வந்திருக்கிறதென்றால், அந்நிலை போற்றப்பட வேண்டிய செயலேயாகும்.

இவ்வித்தியாசாலையை அமைப்பதிலே முன்னோடிகளாய் நின்றவர்களான அமரத்துவமடைந்த கவிஞர் மு செல்லையா, ஆசிரியர் திரு க. முருகேசு ஆகிய இருவரும் சமுதாயம், கல்வி, சமயம் முதலாய துறைகளிலே மக்களை வழிநடத்திச் செல்லுமுகமாக இரட்டையர்களாக வாழ்ந்து வந்ததையும், அவர்களது திறன்கொண்ட முயற்சியாலும், ஊர்மக்களின் ஒத்துழைப்பாலும் இவ்வித்தியாசாலை உருப்பெற்றதையும் நாம் அறிவோம்

மேலும், யாழ். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மடியிலே தவழ்ந்து வளர்ந்துள்ள இப்பாடசாலைக்குச் சங்க வரலாற்றிலே ஒரு விசேட குறிப்பும் மதிப்பும் உண்டெனக் கூறப்படுகிறது. தங்களது மற்றெந்தப் பாடசாலைக்கும் ஏற்படாத ஒரு புதுமை— மிகக் குறுகிய காலத்திலே இப்பாடசாலை அரசினரால் அங்கீகரிக்கப்பட்டமை — ஆகிய இச் செய்தியைக் கூறி இவ்வூர் மக்களின் தெய்வானுகூலத்தைப் புகழ்ந்து பேசுவதுண்டென அறிகின்றோம்.

இக்காலத்திலே இப்படியான நிறுவனங்கள் அமைப்பது ஒரு சுலபமான காரியமாகலாம். ஆனால் அக்காலத்திலே, அன்றைய சூழ்நிலையிலே இப்படியான ஒரு வித்தியாசாலை அமைக்க முடிந்தது என்றால் அதற்கு இப்பாடசாலைச் சூழலிலே வாழுகின்ற மக்களின் புண்ணியப்பேறே காரணம் என்று கூறுதல் மிகையாகாது.

இப்பாடசாலைச் சுற்றுடற் சமுதாயத்திலே இருபத்தைந்து ஆண்டான இக்கால் நூற்றுண்டுக் காலத்திலே ஒரு புதிய சமுதாயம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு புதிய சமுதாயம் உருவாகிறது என்றுல், அதன் கருத்து—தனக்கும் பிறர்க்கும் பணிபுரியக் கூடிய ஒரு சமுதாயம் உருவாகிறது என்பதையே அது குறிக்கிறது.

இவ்வித்தியாசாலை சமுதாயத்தின் உயர்ச்சிக்காக—அதன் வளர்ச்சிக்காக — உண்டாக்கப்பட்ட சிறந்த ஒரு விருட்சமாக நம் கண்முன்னே தோன்றுகின்றது. இந்த விருட்சத்தின் நிழலிலே கல்விபெற்று இளஞ்சந்ததியினர் வளரவேண்டும்—இந்த நாட்டின் கண்களெனத் திகழவேண்டுமென்பதே எனது பேரவா.

இப்பாடசாலையின் உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் இப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஆவன செய்யக் காத்திருக்கின்றேன்.

எனது தொகுதியிலே இப்பாடசாலை எதிர்காலத்திலே ஓர் உயர்கல்விக் கூடமாகத் திகழ எல்லோரும் உழைத்தல் வேண்டும்

இவ்வித்தியாசாலை ஆலவிருட்சம் போல மென்மேலும் கல்வியின் பல துறைகளிலும் வளர்ந்து இளஞ்சந்ததியினர்க்குப் பெருந் தொண்டாற்றுதற்கும், ஊருக்கும், நாட்டிற்கும் பெருமை உண்டாவதற்கும் அருள வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

★

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம்
விஞ்ஞானக் கல்வி அதிகாரி

## திரு. க. பொன்னம்பலம் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

அல்வாய் சிறீலங்கா வித்தியாசாலை இவ்வாண்டுடன் 25 ஆண்டு நற்சேவையை பூர்த்திசெய்து வெள்ளிவிழாக் கொண்டாடும் நிலையில் வெளியிடப்படும் வெள்ளி விழா மலருக்கு என் ஆசியை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அல்வாயைச் சேர்ந்த கவிஞர் மு செல்லையாவினதும், சமூகத் தொண்டர் க. முருகேசுவினதும் பெருமுயற்சியால் 7—10—54-ம் ஆண்டில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக பெருமளவு சைவமக்கள் வாழும் இக் கிராமத்தில் சைவ சமயச் சூழலில் தமது பிள்ளைகளுக்குக் கல்விபோதிக்க விரும்பி இக்கிராமத்தில் அமைந்திருந்தபிறமதப்பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்ப விரும்பாத பெற்றோருக்கும், மிகத்தூரத்தில் அமைந்திருக்கும் பாடசாலைகளுக்கு மிகப்பெரிய சிரமத்திற்கு மத்தியில் அனுப்பிவந்த பெற்றோருக்கும் பேருதவியாக அமைந்தது.

இப்பாடசாலை, சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டு அவர்களின் முகாமையின் கீழ் நல்ல முறையில் இயங்கிய பின் 1956-ம் ஆண்டில் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டு தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது. ஆரம்ப பாடசாலையாய் இருந்த பாடசாலை தற்போது நன்கு வளர்ச்சியடைந்து 1—8-ம் வகுப்புவரை கல்விபோதித்து வருகின்றது

கிராமப்புறப் பாடசாலைகளிலும் விஞ்ஞானப் போதனை வசதிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் இப்பாடசாலையிலும் விஞ்ஞானக் கல்விப் போதனை ஆரம்பிக்கப்பட்டு இக் கல்விக்குரிய வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இப்பாடசாலை மேலும் சிறப்புற்று இக்கிராம மக்களுக்கு தொடர்ந்தும் உயர்ந்த சேவையை அளிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர்

## திரு. த. இராசலிங்கம் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துக்கள்.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை அல்வாய் வாழ் மக்களுடைய சமூக வரலாற்றில் ஒரு தனித்துவம் வாய்ந்த தூய்மையான இடத்தைப் பெறுகின்றது. அல்வாயூர் கவிஞர் அமரர் மு. செல்லையா அவர்களுடைய கல்விச் சேவையின் அரும்பெரும் சின்னமாக விளங்குகின்றது. நலிந்த சமுதாயம் எழுச்சி பெற்று வலுவடைவதற்கு கல்வி நிறுவனம் கலங்கரை விளக்கம் போல் அமையும் என்ற உண்மையைக் கவிஞர் சீரிய முறையில் சிந்தித்தார் சமுதாய மறுமலர்ச்சிக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த கவிஞர் கல்வி நிறுவனத்தின் மூலமாக சிந்தனைப் புரட்சி, பொருளாதார வளர்ச்சி, கலாச்சார மறுமலர்ச்சி, சமுதாய உணர்வு இன்ன பிறவற்றை நடைமுறைப் படுத்த நல்வழிகாட்டும் சாதனமாக இவ் வித்தியாலயத்தை அமைத்தார்.

இந்த இலட்சிய அடிப்படையில் கடந்த 25 ஆண்டுகளாக ஸ்ரீலங்கா வித்தியாலயம் , ஆற்றிவரும் சேவை அளப்பரியது. கல்வி, கலை, கலாச்சார சமுதாய மறுமலர்ச்சித்துறையில் அளப்பரிய சேவையாற்றி எண்ணிலா சேவையாளர்களையும், சிந்தனையாளர்களையும், செயல்வல்லுனர்களையும் உருவாக்கியுள்ளது வியத்தற்குரியது எனவே கவிஞருடைய அபிலாசைகளை சொல்லளவில் நிறுத்தாது, நடைமுறையில் நாமெலாம் தொடர்ந்தும் தொண்டாற்றுவோமாக

வாழ்க ஸ்ரீலங்கா! வளர்க அதன்பணி!

முன்னாள் அதிபரும் ஸ்தாபகருள் ஒருவருமான

**திரு. க. மு. முருகேசு அவர்கள் வழங்கிய**

# ஆசிச் செய்தி

அன்பு வளர்ந்து அறநெறி முதிர்ந்து துன்பம் அகன்று இன்பமுற இனிய நன்கலைகளை எங்கும் பரப்பி என்றும் இளமையோடு நன்று பொலிந்து நற்பணி ஆற்றி ஒற்றுமை ஓங்க உயர்வு தாழ்வு உலகிடைமறைய சுயநலம் போக்கிப் பிறர் நலம் பேணி கல்வியுஞ் செல்வமும் கடவுட் பக்தியும் வல்வினை அகல வழிவகை வகுத்து விஞ்ஞானங் கற்று மெய்ஞானம் பெற்று நம் சிறூர் உறவும் செம்மையும் வளர ஆல்போல தழைத்து அறுகுபோல் வேரூன்றி ஆனைமுகன் ஐந்து கரன் அருட் பெருவெள்ளம், அல்வாயூர் சிறீ லங்கா அருங்கலைக் கூடத்தை அணுகி ஓட அவனடி பணிகின்றேன்.

"ஆனந்தகானம்"
ஆவரங்கால்

க. மு. முருகேசு.

# ஆசிரிய மணிகளுக்கு!

அறிவு தரும் தொழிலாகும் ஆசிரியத் தொழிலுக்கு
ஆங்காங்கே தேன் தேடும் தேனியின் தன்மை போல
இங்கும் அங்கும் நூல்தேடி இரவிபோல் அறிவு கொண்டு
ஈயவேண்டும் மாணவர்க்கு இனிமையுடன் பாடமதை
உரம் பெற்ற செடிபோல உய்யவேண்டும் மாணவர்கள்
ஊமைபோல் உள்ளவரும் உன்னதமாய் வாய்விட்டு
என்னவினுக் கேட்டாலும் எடுத்தியம்ப விடையதனை
ஏற்றமுடன் முன்வந்தால் எல்லோரும் போற்றுவார்கள்
ஐயமில்லை ஆசிரியர் இறைவன் பெயர் பெற்றிடுவர்
ஒருநாளைக் கொரு புதுமை உள்ளமதில் பதிந்திடவே
ஓதவேண்டும் பலகலைகள் பண்புடனே மாணவர்க்கு
ஔடதமாய் அமையவேண்டும் ஆசிரியர் அருஞ்சொற்கள்
எஃகு போல் மாணவர்கள் கலைஞர்கள் ஆகவேண்டும்.

ஆசிரியை:- திருமதி. ப. புண்ணியமூர்த்தி.

பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி

## திரு. நா. துரைச்சாமி அவர்கள் வழங்கிய

# நல்லாசிச் செய்தி.

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த வடமராட்சிப் பிரிவிலே வளமார்ந்த அல்வையம்பதியிலே சமய கலாச்சாரத் துறையோடு கல்வி கற்கும் வாய்ப்பை அளிக்கும் நோக்கோடு நம்மவர் சைவப்பாடசாலை அமைக்க நாட்டங் கொண்ட வேளை யிலே, இப்பதி வாழ்ந்த இந்துப் பெருமக்கள் தமக்கென ஒரு கல்விக்கூடம் அமைத்திட விழைந்தனர். 1937 இல் ஆர்வமிகுந்த மக்கள் கால்கோள் எடுத்துக் கருமமாற்றினரேனும், அவர்களது உளத்தூண்டல் உள்ளார்ந்து உலவி 1954 இல் மீண்டும் புத்து யிர் பெற்றபோதே யாழ் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மூலம் இவ்வித்தியாலயமாகும் ஸ்ரீலங்கா வித்தியாசாலை உருவா கியது.

ஊர்மக்களின் உன்னத ஒத்துழைப்பும், உறங்காமலே செயலாற்றும் திறன்கொண்ட ஊர்ப் பெரியோர்களான ஆசிரியர் திரு. க. முருகேசு, கவிஞர் மு. செல்லையா என்போரின் பெரு முயற்சியின் விளைவுமே இவ்வித்தியாலயமாகும்.

இவ்வித்தியாலயம் கல்விச் சேவையில் பல்துறையிலும் முன்னேற்றங் காட்டி வளர்ந்து வந்துள்ளது

வெள்ளி விழாக் காணும் இவ்வேளையிலே இப்பாடசாலை மேலும் வளர்ச்சியடைந்து எங்கள் வட்டாரத்திலே ஒரு இந்து மகா வித்தியாலயமாகத் திகழ வேண்டுமென இறைவனை வேண்டி என் நல்லாசிகளை வழங்குகின்றேன்.

# அறிக்கை.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையினது தோற்றத்தின் இருபத்தைந்தாண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடுவதும், வெள்ளி விழா மலர் வெளிவருவதும் மகிழ்ச்சிக் குரியதாகும்.

இப்பாடசாலையின் தோற்றம் வளர்ச்சி விருத்தி முதலானவற்றிற்கு கருவூலமாக அமைந்தவர்களை, இப்பாடசாலை உள்ள காலம் வரையும் அறிந்து கொள்ளவும், நினைவு கூரவும், இப்பாடசாலைக்கு ஒரு வரலாறு படைக்க வேண்டும், விழா மலர் ஒன்று வெளியிட வேண்டும் என்ற நல்லதோர் கருத்தினை 2—11—79-ல் கூட்டப்பட்ட இப்பாடசாலை அபிவிருத்திச்சங்கப் பொதுக் கூட்டத்தில் வெளியிட்டார் அதிபர் திரு வே. தணிகாசலம். இக்கருத்தை பொதுச்சபைத் தீர்மானமாக ஏற்றுக் கொண்டதும், வெள்ளிவிழா செயற்குழு ஒன்றும் தெரியப்பட்டது விழாக் குழுவினர் ஒழுங்காகச் செயல்பட்டுள்ளனர், என்பதை இன்று நீங்கள் காணும் விழாக் கோலமும் மலரும் சான்று பகிர்கின்றன.

இவ்வித்தியாசாலையின் தோற்றம் வளர்ச்சி தொடர்பான வரலாற்றுக் கட்டுரையை, இம்மலரின் வேறொரு பகுதியில் நீங்கள் காணக்கூடியதாக இடம் பெற்றுள்ளது. எனவே, அவ்வரலாற்றினை நான் இதில் குறிப்பிடவில்லை.

இப்பாடசாலை மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு எத்தனையோ தேவைகள் உள்ளன. தேவைகள் எல்லாவற்றையும் அரசாங்கம் நிறைவேற்றுமென்ற உணர்வுடையவர்களாக இப்பாடசாலைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும், ஊரவர்களும் இருக்காமல், தம்மால் செய்யக் கூடிய உதவிகளையும், உபயங்களையும் பாடசாலைக்கு அளித்தல் பாராட்டுக்குரியதாகும்.

இப்பாடசாலைக்கு வேண்டியனவற்றை நன்கொடையாக அளித்த பண்புடையவர்களை, பாராட்டுவதன் காரணமாகவே மேலும் வசதிபடைத்த குணநலமுள்ளவர்களையும் இப்பாடசாலைக்கு அன்பளிப்புக்கள் செய்யத் தூண்டலாம் என்பதை மறந்துவிடக் கூடாது.

விலைவாசிகள் ஜெட் வேகத்தில் உயருகின்ற இக்காலகட்டத்தில், எமது பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் திரு வே. பாலசண்முகம், ஜெயபாலன் அரங்கினைக் கட்டி இப்பாடசாலைக்கு உபயமளித்த பெருந்தன்மைக்கு சங்கச் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன்.

இன்று இவ்விழாவைக் கொண்டாடுவதற்கும், மலர் வெளிவருவதற்கும், ஒழுங்காகச் செயல்பட்ட விழாக் குழுவினர்க்கு எனது உளம் கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இவ்விழாவிற்கும், மலருக்கும் வேண்டிய நிதி உதவியைக் கொடுத்த எமது அபிவிருத்திச் சங்க உறுப்பினர்க்கும், மலருக்கு விளம்பரங்கள் கொடுத்தெம்மை ஆதரித்த வர்த்தகர்கட்கும், தொழிலதிபர்கட்கும், விழாவினைச் சிறப்பிக்க வந்த ஏனையோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

**க. தனபாலசிங்கம்**
அபிவிருத்திச்சபைச் செயலாளர்.

# ஸ்தாபகர்கள்:



திரு. க. மு. முருகேசு அவர்கள்
அதிபர் சேவை
1967 — 1969



கவிஞர் மு. செல்லையா அவர்கள்
அதிபர் சேவை
1955 — 1966

சிவமயம்.

# யா/அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்.

அல்வாய் வடக்கில் சற்கோட்டை உவெஸ்லியன் மிசன் பாடசாலை என்ற பெயருடன் காளியான் சுற்று — வெள்ளைப் புற்று என்ற இடத்தில் ஒரு தாபனம் அமைக்கப்பட்டு அப்பகுதிச் சிறுர்களுக்கு ஆரம்பக் கல்விச் சேவை செய்து வந்தது. அது காலக் கிரமத்தில் மூடப்பட்டது இப் பகுதியிலுள்ள பின்தங்கிய - சமூக உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தை மத மாற்றம் செய்து தம் மதத்தை வளர்க்கலாமென்ற நோக்கோடு போர்த்துக்கேயராலாக்கப்பட்ட புராதன கத்தோலிக்க தேவாலயமும் அமைக்கப்பட்டிருந்தது. பின்தள்ளப்பட்ட எமது சமூக முன்னோடிகள் சைவப்பற்றும், தமிழ்ப் பற்றும் மிக்கோராய் வாழ்ந்து தமக்கென மூன்று சைவாலயங்களைத் தாபித்து அவற்றைச் சைவாகம முறைப்படி அர்ச்சித்து வந்தனர். அவையே மாரும்புல விநாயகராலயம். அரசடி (குருக்கட்டு) விநாயகராலயம் குமுதெணி விநாயகராலயம் என்பன இக் காரணங்களால் பின் தள்ளப்பட்ட எம் சமூகத்தில் இருந்து ஒரு தனி நபரையாகுதல் மத மாற்றம் செய்யப் போர்த்துக்கேயரால் முடியவில்லை. சமூக வளர்ச்சிக்குக் கல்வி இன்றியமையாதது என்பதைக் கருத்திற் கொண்டு காலக் கிரமத்தில் நாவலர் பெருமானைப் பின்பற்றி நம்மவர் இப் பகுதியில் ஒரு சைவப் பாடசாலையைத் தாபிக்க எண்ணினர்கள். தேவரையாளிச் சைவ கலைஞான சபை, தேவரையாளிச் சைவ வித்தியாசாலையைத் தாபித்தபோது அதன் ஆரம்ப ஆசிரியர்களாக இப் பகுதியிலிருந்து அமரத்துவம் அடைந்த இருவர் (திருவாளர்கள் பெரியதம்பி, கந்தப்பு) நியமிக்கப்பட்டனர். தேவரையாளிச் சைவ வித்தியாசாலை, இப் பகுதிச் சிறுர்கள் சென்று கல்வி கற்பதற்கு வெகுதூரத்தில் அமைந்தமையால் இப் பகுதியிலும் ஒரு சைவப் பாடசாலையைத் தாபிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாகியது. 1937-ம் ஆண்டு அரசடி விநாயகராலயத்திற்குத் தெற்கேயுள்ள "தெவுளியானை" என்ற காணியிற் சைவப்பாடசாலை கட்டப்படுவதற்கான அத்திவாரக்கல் நாட்டப்பட்டது ஆயினும் அது நிறைவேருமற் போயிற்று

தேவரையாளிச் சைவ வித்தியாசாலை படிப்படியாக வளர்ந்து பல ஆசிரியர்களை உருவாக்கி முக்கியத்துவமடைந்த காலகட்டத்தில் அது மேலும் வளர்ச்சி கருதி ஆங்கிலக் கல்லூரியாக மாற்றமடைந்த போது, ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. நமது சமூகத்தின் முதற் சைவத் தமிழ் ஆசிரியராக இருந்து தலைமைவகித்த கவிஞர் திரு. மு. செல்லையா பாடசாலையிலிருந்து வெளிவந்த போது அங்கே கற்பித்த மற்றும் பல தமிழாசிரியர்களின் நிலைமை குறித்தும் சிந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது இப்பகுதியில் ஒரு சைவப் பாடசாலையைத் தாபிப்பது என்ற முன்னைய எண்ணம் மேலும் வலுப்பெற்றது. அக்காலத்தில் கவிஞர் திரு. மு செல்லையாவும், ஆசிரியர் திரு. க. முருகேசுவும் "தாமிருவராகக்" கல்வி,

சமூகம், சமயம், கிராமம் ஆகியவற்றில் ஒருமைப்பாடுடையோராய் இருந்தார்கள். "விநாயக வித்தியா மன்றம்" ஒன்றை ஆரம்பித்து அம் மன்றச் சார்பில் பாடசாலையைத் தாபித்து யாழ். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாரிடம் ஒப்படைப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

அரசடி விநாயகராலயத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டினர் அதில் அல்வாய் வடக்கு, அல்வாய் தெற்கு, அல்வாய் மேற்கு, புலோலி மேற்கு, துன்னாலை ஆகிய பகுதிகளில் உள்ள எமது சமூக முன்னோடிகள் பலர் சமுகமளித்தனர். 'மன்றம்' அமைக்கப்பட்டது. கவிஞர் திரு. மு செல்லையா தலைவராகவும், திரு வ. சின்னத்துரை வைத்தியர் (வயல்) காரியதரிசியாகவும், திரு. சி வேலுப்பிள்ளை (ஸ்ரீ கந்தவாசம்) தனாதிகாரியாகவும், நியமிக்கப்பட்டனர். திருவாளர்கள் க. வேலுப்பிள்ளை (இலச்சிங்கனொல்லை), த. மகேசு (மாறும்புலம்), கா. சுந்தரம் (முள்ளாவத்தை), நா சீனித்தம்பி (சூழுதெணி), சி. கிருஷ்ணபிள்ளை (ஆலங்கட்டை), க கிருஷ்ணபிள்ளை (மாயக்கை), சி கிருஷ்ணபிள்ளை (துன்னாலை), இ. செல்லத்துரை (கிளானை), நா. கிருஷ்ணபிள்ளை (அம்மன் கோவிலடி), நா. நல்லையா (வண்டியவத்தை) என்போர் நிருவாகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். நிதி நிலைமை ஆராயப்பட்டது

ஏற்கெனவே அல்வாய் வடக்கில் இயங்கி வந்த சமூகப் புனருத்தாரண ஐக்கிய சங்கத்தால் சேமிக்கப்பட்ட பணத்தை அங்கத்தவர்களின் அனுமதியோடு இந்த ஸ்தாபனத்துக்கு எடுப்பதென்றும், அங்கத்தவரிடம் நிதி சேரப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது யாழ் நகரில் தொழில் புரிந்த திரு கா. ஏரம்பு அவர்களிடம் முதன் முதல் உதவி கோருவது என்ற தீர்மானத்தின் பேரில் அவரிடம் சென்ற போது தமது உண்டியலின் மூலம் நூறு ரூபா வெள்ளி முழு ரூபா நாணயங்களை இறைவழிபாடோடு உவந்து அளித்தார் மேலும் அவர் அவ்வப்போது நிதியுதவி புரிந்தார் இவரது கைவிசேஷம் நல்ல பலனை அளித்தது. சமூகப் புனருத்தாரண சங்கத்தினரால் சேமிக்கப்பட்ட பணத்தைச் சிலர் திருப்பிப் பெற்றுக் கொண்டனர். நன்மனம் படைத்த பல அன்பர்களின் சேமிப்புப் பணம் சுமார் 1500/-க்கு மேற்பட்ட தொகை ஆரம்பச் செலவுகளுக்கு உதவின

"பெரிய சீமா" என்ற இந்தக் காணியைப் பெற்று பாடசாலை அமைப்பதென முடிபு செய்யப்பட்டது. திரு. அ. கந்தையா (தெணியானின் தந்தை) அவர்களது குடும்பத்தினர் இலகுவான விலையிலும், திரு. சீ. வைகுந்தசாமி ஆசிரியர் அவர்களது குடும்பத்தினர், சமூக நலன் கருதி இலவசமாகவும், இலகுவான விலையிலும் தந்துதவினர் காட்டுப்புலம் திரு கா. ஆறுமுகம் தமது பங்கை அன்பளிப் செய்தார்.

1954-ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் (7-10 1954) வியஜதசமியன்று அப்போது வடமாகாண அரசாங்க அதிபராக இருந்த சைவப்பெரியார் உயர்திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் பாடசாலைக்கு அடிக்கல் நாட்டி அரசடி விநாயகராலயத்துக்கு மேற்கே அமைந்திருந்த நெசவு சாலையில் வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார் முன்னாள் வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி. சரவணமுத்து அவர்கள் பிரதம விருந்தினராகச் சமுகந் தந்து சொற்பொழிவாற்றினார். அன்று பதினான்கு சிறுவர்கள் பாடசாலையிலே சேர்க்கப் பெற்றனர் இப்பாடசாலையின் ஆரம்ப ஆசிரியராக திரு க கிருஷ்ணபிள்ளை (தொண்டைமானாறு) ஆசிரியையாகத் திருமதி. இரத்தினம் செல்லத்துரை என்போர் நியமிக்கப்பட்டனர். திருமதி இரத்தினம் சில நாட்களில் விலகிக் கொள்ள திரு சி கணேசமூர்த்தி (மாறும்

புலம்) நியமனம் பெற்றார். எமது உற்சாகத்தையும், சேவையையும் பாராட்டிய சைவ வித்தியா விருத்தி சங்க மனேஜர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் ஆரம்பப் பாடசாலைக்கான சில தளபாடங்களோடு திரு. க. இராசமணி என்ற பயிற்சி பெற்ற ஆசிரியரையும் 1955 தை மாதம் தந்துதவினர்.

புதிய கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மேசன்மார் திரு மு. மயிலு, அமரர் திரு க. செல்லக்குட்டி குழுவினரும், இன்னும் சிலரும் குறைந்த வேதனத்தோடு சிரமதானம் எனக் கருதி கட்டிடத்தைப் பூர்த்தியாக்கினர். வேண்டிய பனை மரங்களை எவ்வித தடையுமின்றி தறித்து உபயோகிக்கப் பனைச் சொந்தக்காரர் உத்தரவிட்டனர். தேவரையாளி திரு. சின்னத்தம்பி அவர்கள் பாடசாலைக் கோபுச வேலையை இலகுவான செலவில் செய்து முடித்தனர். அப்போது மந்திகைப் பிரபல வர்த்தகர் திரு. கந்தப்பு அவர்கள் கட்டிடத்துக்கு வேண்டிய பொருட்களைக் கடனாகத் தந்து பேருதவி புரிந்தார். கோப்புச வேலை முடிந்ததும் வேண்டிய ஓடுகளைச் சுமார் (3500) சைவப்பெரியார் திரு சி சிவகுரு அவர்கள் தந்துதவினர். இவர் இப்பாடசாலையை உயர் கல்லூரியாக்குவதில் தாம் எவ்விதத் தியாகமும் செய்யத்தயார் என ஊக்குவித்தார். நான்கு மாதகால கட்டத்தில் புதிய கட்டிடத்தை உருவாக்குவதில் தமது உடமைகளை விற்றுதவிய திரு. க. மு. முருகேசு ஆசிரியரின் தியாக சிந்தை போற்றப்பட வேண்டியதே.

1954-ம் ஆண்டு புரட்டாதியில் அத்திவாரமிடப்பட்ட புதிய கட்டிடம், 2-2-1955 இல் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. குமாரசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சைவப்பெரியார் திரு. சு. இராசரத்தினம், நீர்வேலி பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், புலோலி வித்துவான் கந்தசாமி ஆகியோர் ஆசியுரையோடு புதிய நிறுவனம் ஆரம்பமாயிற்று.

இப்பாடசாலை 3-1-1955 இலிருந்து அரசாங்க நன்கொடைபெறும் பாடசாலையாப் பதிவு செய்யப்பட்டதும், 1-1-1956 இல் அரசினர் பாடசாலையைக் கையேற்றதும் குறிப்பிடத்தக்கன. 1956 செப்ரெம்பர் மாதம் ஆசிரியர்களின் வேதன நிலுவைப் பணத்தை (உதவி நன்கொடைப் பணம்) அரசாங்கம் அனுப்பி வைத்தது. பாடசாலைச் சகாப்தத்தில் இதுபேருவகையளிக்கும் சம்பவமாகும். அன்று மூன்று விநாயகராலயங்களிலும் விசேட பூசை ஆராதனை செய்வதில் ஆசிரியர்களும், மாணவர்களும் பங்குகொண்டனர்.

1955 ஐப்பசியில் கவிஞர் மு. செல்லையா தலைமை ஆசிரியர் பதவியைக் கையேற்றார்.

ஆரம்பகால ஆசிரியர்களுள் திரு. க. கிருஷ்ணபிள்ளை (தொண்டமனாறு) ஆசிரியர் அவர்களும், திரு சி. கணேசமூர்த்தி (மாரும்புலம்) அவர்களும், அப்போது குறிப்பிட்ட காலத்திற்கு வேதனமின்றிச் சேவையாற்றியதுடன், எல்லா வகையிலும் பாடசாலைக்கு உதவி புரிந்தனர். செல்வி ஆ. சிவபாக்கியம் இப்பாடசாலையின் முதலாவது பெண் ஆசிரியையாக நியமனம் பெற்றார். பாடசாலை மாணவிகளை வழி நடத்துவதிலும் புற வேலைகளில் ஈடுபடுத்தி வெற்றிவாய்ப்பைப் பெறுவிப்பதிலும் இவர் செய்த சேவை பாராட்டற்குரியது. கவிஞர் திரு. மு. செ. அவர்கள் தமக்கே உரித்தான விவேகத்தை உபயோகித்து பல மாணவர்களைப் புலமைப் பரீட்சையில் சித்தியடையச் செய்ததும், கலைநிகழ்ச்சிகளிலும், புற வேலைகளிலும் ஈடுபடுத்தி வெற்றி ஈட்டியமையும் என்றும் நினைவில் இருக்க வேண்டியவை. அன்னாரின் முயற்சிகளுக்கு உசாத்துணையாக இருந்து மாணவரின் பரீட்சைப்

பெறுபேறுகளுக்கு உதவிபுரிந்த ஆசிரியர் களான திரு க. கிருஷ்ணபிள்ளை, திரு. சி. கணேசமூர்த்தி, திரு. ம முருகேசன், திரு. கா. க கிருஷ்ண்பிள்ளை ஆகியோரின் நல்ல சேவையும் போற்றப்பட வேண்டி யவை.

திருவாளர்கள் த. கனகரத்தினம், க. இராசையா ஆகியோர் இப் பாடசாலை யில் புதிதாக நியமனம் பெற்றனர். பல ஆசிரியர்கள் இடமாற்றத்தின் மூலம் இப் பாடசாலையில் நியமனம் பெற்றனர். பிரதானமாக திருவாளர்கள் மு. செல்லப் பாக்கியம், க. கிருஷ்ணபிள்ளை, ம. முருகேசன், வே. மகேசன், க. நடேசன் ஆகியோர் அத்தகையோராவர். அவர்க ளது நற் சேவையும் பெரிதும் பாராட்டற் குரியது.

1967 ஜனவரி முதல் திரு க. மு. முருகேசு ஆசிரியர் அவர்கள் அதிபராகக் கடமையேற்று 1969 டிசம்பர் ஈறுகக் கடமை புரிந்த காலத்தில் 110×20 அடி அளவு கொண்ட நிரந்தரப் பாடசாலைக் கட்டிடம் ஒன்று பழைய பாடசாலையோடு இணைக்கப்பட்டது.

திரு. கா. க. கிருஷ்ணபிள்ளை ஆசிரி யர் அவர்கள் இருகால கட்டத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றியதுடன் அதிப ராக நியமனம் பெற்றுக் கடமையாற்றிய போது, கட்டிடத் திருத்த வேலைகள் மேற் கொண்டார். பின்பு திரு வே. த. தணிகாசலம் அவர்கள் ஏற்கெனவே இப்பாடசாலையில் அதிபராக இருந்தது டன் மீண்டும் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றுர். இவரது சேவைக் காலத்தில் கிணற்று வேலை, கட்டிட விஸ் தரிப்பு முதலியன நடைபெற்றன.

கிணற்று வேலைக்கு அரசாங்கத்தின் நிதியுதவியும், கிராமத்திலுள்ள சனசமூக நிலையங்களின் சிரமதானப் பணியும் கிடைத்தன. இவரது சேவைக் காலத்தில் இப் பாடசாலை 1972 இல் கனிஷ்ட பாட சாலையாக அங்கீகரிக்கப்பட்டது இப்பாட சாலையில் இலவச ஆசிரியசேவை செய்தவர் களின் கல்விச் சேவையும் பாராட்டுக்குரி யது

இந்தத் திறந்த வெளியரங்கை அமரத்துவமடைந்த தமது புத்திரன் ஜெயபாலன் ஞாபகார்த்தமாகப் பெரும் பொருட் செலவுடன் நிருமாணித்துத் தந்த திரு. வே பாலசண்முகம் தம்பதி கள் மேலும் பல தொண்டுகளைச் செய்ய இறைவன் வழி வகுப்பாளுக.

வெள்ளி விழா நடைபெறும் இந்த நல்ல வேளையிலே இவ் வித்தியாசாலை யின் முன்னேற்றத்திற்காக முயன்றவர்கள் அனைவரையும் வாழ்த்துவோமாக!

தொகுக்கப் பெற்றது.

பொன்விழாக் காண வாழ்த்துகிறோம்

கட்டைவேலி - உடுப்பிட்டி
தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு
கூட்டுறவுச் சங்கம்
கரவெட்டி

*With the best Complements from*

# XAVY

# *Glass & Metal Works*

**Manufacturers & Distributors**
**of**
**TOP QUALITY**

- **Tumblers,**
- **Chimneys,**
- **Bottle Lamps.**
- **Bottles 1 oz. 2 oz, & 3 oz**

★

**SHOW ROOM**
*134, wolfandhal Street,*
*COLOMBO - 13.*
*Phone: 35724*

**FACTORY**
*Xavy Glass & Metal Works*
*Point Pedro Road,*
*NEERVELY:*

பருத்தித்துறை-புலோலி

## தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

பருத்தித்துறை.

**வட அல்வை ஸ்ரீ லங்கா வித்தியாசாலையின்**

இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா இனிதே சிறப்புற

எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

எமது சங்கத்தின் உற்பத்திப் பொருட்களை, சங்கத்தின் கீழியங்கும்

கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை இத்தால்,

வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

எமது முன்னைய நவின இயந்திரங்களுடன்

இப்போதைய புதிய தருவிப்புகள்

- சுலோட்டிங் மெஷின்,
- ஸ்பிரே வெல்டிங் மெஷின்
- எலெக்றிக் கட்டிங் மெஷின்,
- சகல இயந்திரங்களினதும் உதிரிப்பாக ஆக்கங்களுக்கு உகந்த ஏனைய சிறு இயந்திரங்களும்

# ஸ்ரார்

# எலெக்ட்றிக் வெல்டேஸ்

அன்ட்

# ரேணிங் வேக்ஸ்

233, ஸ்ரான்லி வீதி
தொலைபன்னி: **7352**

யாழ்ப்பாணம்

## STAR ELECTRIC WELDERS & TURNING WORKS

**233, Stanley Road,** **JAFFNA.**

# வெள்ளி விழா ஆசிரியர்கள்



மலரை எழிலுற - வனப்புற - ஆக்கியுதவிய மலர் ஆசிரியரான

**வித்துவான் ம. முருகேசன் அவர்கள்**

இவரது வெள்ளி விழாவிற்கான இருபத்தைந்தாவது ஆண்டின்
நிறைவு நாள் : 31—1—80

திருமதி புண்ணியவதி மகாலிங்கம் ஆசிரியை அவர்கள்
திரு. வே. த. தணிகாசலம் அதிபர் அவர்கள்
செல்வி சூ. சிவபாக்கியம் ஆசிரியை அவர்கள்



முன்னாள் அதிபர் :

**திரு. கா. க. கிருஷ்ணபிள்ளை அவர்கள்**


# வித்தியாசாலை இல்ல விளையாட்டுப் போட்டி
## ஆரம்பம்: 1959

இல்லங்கள்:

"பெரியதம்பி" — சிவப்பு இல்லம்
"கந்தப்பு" — மஞ்சள் ,,
"தம்பையா" — பச்சை ,,

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி — 1979







மத்திய பிரிவு வீராங்கனை
செல்வி. மு. ரஜனி

' எண்சாண் உடம்பிற்கு
சிரசே பிரதானம் ''

அழகுக்கு அழகூட்டும் வகையில்
சிகையலங்காரம் செய்துகொள்ள
**இன்றே விஜயம் செய்யுங்கள்**

★

## ★ சாந்தி சலூன் ★

**மெயின் வீதி — பருத்தித்துறை.**

உரிமையாளர்: க. வரதராசா

வெள்ளிவிழாக்காணும்
ஸ்ரீ லங்கா வித்தியாசாலைக்கு
**எமது நல்வாழ்த்துக்கள்**

பாத அணி வியாபாரத்தில்
பலவருட அனுபவம் பெற்றவர்கள்

# பாமினி

மக்கள் சந்தை — **பருத்தித்துறை.**

பலசரக்கு வியாபாரத்தில்
மக்களின்
நன் மதிப்பைப் பெற்றவர்கள்



## நாதன் ஸ்ரோர்ஸ்

9, மக்கள் சந்தை,
பருத்தித்துறை.

'' நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம் ''
சகல விதமான ஆங்கில மருந்து
வகைகளையும், மருந்து மூலிகை
களையும், வாசனைத் திரவியங்
களையும், பால்மா உணவு
வகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

★

## ஸ்ரீ முருகன்
## மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

**165/3. பஸ் நிலையம்,**
**பருத்தித்துறை.**

பலசரக்கு வியாபாரத்தில்
பாவனையாளரின் தேவைகளைப்
பூர்த்தி செய்ய நினைவில்
நிறுத்த வேண்டிய ஸ்தாபனம்

## சரஸ்வதி ஸ்ரோர்ஸ்

**இல. 11, மக்கள் சந்தை,**
**பருத்தித்துறை.**

---

எமது நல்வாழ்த்துக்கள்:

பலவருட அனுபவம் வாய்ந்த
தொழில் நுட்ப வல்லுநர்களைக்கொண்டு

❋ றேடியோ
❋ ரேப் றெக்கோட்டர்
❋ ஒலிபெருக்கிச் சாதனங்கள்
❋ மின்சார உபகரணங்கள்
❋ மணிக்கூடுகள்

குறித்த நேரத்தில் திருத்திக்கொடுக்க
ஒரே ஸ்தாபனம்

## ஒறின் றேடியோ
## எலெக்ரோனிக்ஸ்

**பிரதான வீதி — பருத்தித்துறை.**
உரிமையாளர்: **P. பத்மநாதன்**

---

*With best compliments from:*

# SIVARAJ TRADING CO.,

*Dealers in: ELECTRICAL GOODS &*
*Distributors for S-LON PIPE & FITTINGS.*

**163, Main Street,**
**POINT PEDRO.**

## புலமைப் பரிசில் பெற்ரோர்

❋



**செல்வன். கா. ஞானதாஸ்**
*1979-ம் ஆண்டு 5-ம் வகுப்பு*
புலமைப் பரிசில் பெற்ற
மாணவன்

**திரு. கோ. செல்வமாணிக்கம்**
அண்மையில் புலமைப் பரிசில்பெற்று
பல்கேரியா நாட்டிற்குச் சென்ற
பாடசாலைப் பழைய மாணவன்



# வடக்கின் வரப்பிரசாதம்

❋

க. கிருஷ்ணபிள்ளை ஆசிரியர்
தொண்டைமானாறு.

இன்று அல்வாய் வடக்கில் ஒரு வெள்ளி விழா. இது ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா. நம்மவர்கள், இதைக் கோலாகாலமாகக் குதூகலத்தோடு கொண்டாடத் திருவருள் கூட்டியுள்ளது.

வடக்கே பாக்கு நீரிணையின் அலைமோதும் இக்கரை, மேற்கே திக்கம் பெருவீதி, தெற்கே வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோவில் தெற்கு வீதியாக அமைந்து செல்லும் வெள்ளவாய்க்கால், கிழக்கே மாயக்கை வயல், இவைகளை எல்லைகளாகக் கொண்டமைந்த பிரதேசம், ஏறத்தாழ ஆறுமைல் சுற்றளவை அளாவியதாகும். கடந்த கால் நூற்றுண்டுக்கு முன்னர், இப்பகுதியில் சைவப் பாடசாலை எதுவும் இருக்கவில்லை. இதனுல், இப்பகுதியில் வாழ்ந்த முன்னவர்கள்-சைவாபிமானிகள், தமது அஞ்சுவயதுப் பிஞ்சுக் குழந்தைகளைத் தகிக்கும் வெயிலையும், நனைக்கும் மழையையும் பொருட்படுத்தாது, தெற்கே ஒருமைல் தூரத்தில் உள்ள, தேவரையாளிச் சைவத் தாபனத்திற்கு கற்றல் கைகூடும் பொருட்டுக், கால் நடையாகவே அனுப்பி வந்தனர். பார்ப்போர் உள்ளத்தில் பச்சாத்தாபத்தை ஏற்படுத்தும் இக்காட்சி அமைப்பு, இவ் வித்தியாசாலை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு சுமார் முப்பது வருடங்கள் வரை நீடித்து நடைபெற்றதாக அறிகிறேும். ஆகவே, இப்பகுதியில் உள்ள நம்மவர்களுக்கு ஏற்பட்ட கற்கும் கற்கும் வகைச் சிரமங்கள், பலரை ஆரம்பக் கல்வியளவில் நிறுத்தி வைத்தன. சிலரை இடைநிலைக் கல்வி மட்டில் இயக்கின. என்றுலும், விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச் சிலராவது கல்விச் சேவைக்குரிய ஆசிரியர்கள் ஆயினர்

இப்பகுப் பிள்ளைகள் தாம் வாழும் சூழலிலே வசதியாய்க் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நீண்டகாலக் கனவை நனவாக்க எண்ணித் துணிந்தார்கள் இப்பகுதிப் பெரியோர்கள். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என உன்னி ஒருமைப்பாடாக ஊக்கங் கொண்டனர். இருவர் தலைமையில் இதய பூர்வமாக இயங்கினுர்கள். அந்த இயக்கத்தின் பெறுபேருய் முகிழ்த்ததே இந்த வித்தியாசாலை. இலங்கையிலே இது ஒன்று தான் "ஸ்ரீலங்கா வித்தியாசாலை" என்ற பெயரில் கல்விச் சேவை செய்கிறது

தலைமை தாங்கிய இருவரில் ஒருவர் தெகனை முருகேசு ஆசிரியர். மற்றவர் மறைந்த கவிஞர் செல்லையா அவர்கள். இவர்கள் இருவருக்கும், இயல்பாயமைந்த சமுதாயப் பாங்கே இவர்களுக்குத் துணிவையும், சமூகக் கனிவையும், எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கும் அளப்பரிய ஆற்றலையும் தந்தது. இவர்கள், சமூகத்துக்கு இனியன செய்யும் இரட்டையர்களாய், உள்ளத்தால் ஒன்று பட்டுத் தம்மை இழந்து தமது சமூக வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டனர். இவர்களை யாமெல்லாம் மரபு வழியாகப் பாராட்டிப்பாடி மகிழ வேண்டும். "உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு" என்கிறது திருக்குறளிலே ஒரு குறள். இவர்களது வழிகாட்டலில் இவ்வித்தி

யாசாலை உதயமாவதற்குக் காணி, நிதியுதவி, மற்றும் கட்டட உபகரண வசதி, சரீர ஒத்துழைப்பு முதலிய வற்றில் முன்னின்று செயற்பாடாற்றிய இப்பகுதிப் பெரியோர், பெற்ருேர், கற்ருேர், அயலார் ஆகியவர்களும் இதயபூர்வமாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள் ஆவர்.

1954-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதி நிகழ்ந்த விஜய தசமி விழா அல்வாய் வடக்கின் வரப்பிரசாதமான ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் ஆரம்ப விழாவாக மலர்ந்து மணத்தது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமையில் மதிப்பிற்குரிய திரு. சு. இராசரத்தினம் அவர்களின் பெருமுயற்சியால் ஒன்றரை வருட காலத்தில் வித்தியாசாலை முழுமை எய்தியது. இவரும் நம்மவர்க்காய் நல்லது செய்தவராகலின் நம்மவரின் நினைவுக்கும் நன்றிக்கும் உரியவராகின்ருர்.

பிறவி தோறும் மனிதனைத் தொடர்ந்து வாழ்வாங்கு வாழவைப்பது கல்வியே அன்றிப் பிறிதொன்றில்லை மனிதனை நல்லவனுக, வல்லவனுக, சுதந்திரமாக, சமத்துவமாக, சகோதரத்துவமாக வாழ வைக்கும் ஆற்றலை அளிப்பது கல்வி மனித வாழ்வுக்கு, பெருகும் வலுவும் திருவும் தருகின்ற கல்வியானது, கொடுப்போரும், கொள்வோரும், இணைந்தியங்கி மனநிறைவு காண வாய்ப்பளிக்கும் சாதனமாகும். கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வமான வித்தியாதானம் அள்ளப் பெருகும் நிதியாக இருதிறத்தாரிடத்தும் ஏற்றம் பெற்றே திகழும்.

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதி ஞயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்(கு) எழுத்தறிவித்தல்"

என்று மகாகவி பாரதியும், வித்தியாதானத்தின் விசேடணம் பற்றி, அற்புதமாக அறிவுறுத்துகிருர். கல்வி உலகில் பிள்ளைகள், பெற்ருேர், ஆசிரியர், அரசினர் என்ற நான்கு பிரிவினரும், ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியவர்கள். எந்த ஒரு பிரிவினரதும் நிகழ்காலம், ஏனைய மூன்று பிரிவினரதும் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தி மிக்கதாகும் ஆகவே, கல்விச்சேவை கண்ணியமாகக் கட்டுப்பாடாக கடமையாக நிகழ, அறிவாலயமான—வரப்பிரசாதமான கல்விக் கூடம் எதிர்கால உலகைச் சிருட்டிக்கும் இணையற்ற சாதனமாக அமையும் மாண்பை தன்னகத்தே தேக்கிச் சிறப்பெய்த வேண்டும்.

வெள்ளி விழாக் காணும் இவ்வித்தியாசாலை. இந்தக் கால கட்டத்திலாவது "ஸ்ரீலங்கா இந்து மகா வித்தியாலயம்" என்ற பெயரில் பக்குவம் பெற்று மேம்பட்டு நிற்கும் காட்சியை, நாங்கள் எல்லோரும் கண்ணுரக் கண்டு களிப்புமிகும் நிலைமை உருவாகாமைக்கு. வடக்கு வாழ் மக்களின் தவக்குறைவே காரணம் எனலாம் இவ் வித்தியா கூடத்தின் ஆரம்பகால ஆசிரியர்களில் யானும் ஒருவன் என்ற வகையில் ஏனையவர்களைப் போல எனக்கும் மேற்கூறிய மனவுளைச்சல் உண்டு இனியாகுதல் பெற்ருேர்கள், பெரியோர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் ஆகியோராகிய நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டுக் குறைவு போக்கி நிறைவுகாணத் திரிகரண சுத்தியோடு உழைப்போமாக

உ

# சேக்கிழாரின் திருத்தொண்டர் மாக்கதை; சில சிந்தனைகள்.

✵

நா. சுப்பிரமணியம் M. A.
தமிழ்த்துறை
(யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)

"பக்திச் சுவை நனிசொட்டப் பாடிய கவிவலவ"ஞகிய சேக்கிழார் செய்த "திருத்தொண்டர் மாக்கதை", பெரிய புராணம், திருத்தொண்டர் புராணம் ஆகிய பெயர்களைத் தாங்கிப் பன்னிரண்டாம் திருமுறையாகத் திகழ்கின்றது. இப் பேரிலக்கியத்திற்கு சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் தரப்படும் தனி மதிப்புக்கு அடிப்படையான அம்சங்களில் முதன்மையானது அதன் பக்திவரலாற்றுப் பணி. இரண்டாவது அம்சம் வரலாற்று மாந்தர்களைக் கதை மாந்தர்களாகக் கொண்டு ஒரு கால சமூகத்தை கண்ணுடி போலக் காட்டிய திறன்; இது சமூக வரலாற்றுப் பணி.

சுந்தரமூர்த்தி நாயஞரும் நம்பியாண்டார் நம்பியும் தொகுத்துக் குறிப்பிட்டுச் சென்ற நாயன்மார்கள் தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று ஆதாரமான பல்வேறு தகவல்களைத் திரட்டித் தொகுத்துக் காவியம் செய்த வகையில் தமிழ் நாட்டின் பக்தி இயக்கம் தொடர்பான முதலாவது விரிவான வரலாற்றைத் தந்தமையே பக்தி வரலாற்றுப் பணியாக அமைகின்றது. சேக்கிழார் இந்தப் பணியைப் புரிந்திராவிட்டால் சோழப் பெருமன்னர் காலத்திலும், அதன் பின்னரும் மேற்கொள்ளப்பட்ட சைவ பக்தியிலக்கிய முயற்சிகட்கும் நிறுவன ரீதியிலான சைவ வளர்ச்சிக்கும் அடிப்படையே இல்லாமற் போயிருக்கலாமென்பதை நினைவிற் கொள்ளும் போது இதன் இன்றியமையாமை உணரப்படும்.

ஒழுக்கத்தையும் அறத்தையும் சமயக் கருத்துக்களையும் வலியுறுத்தும் வகையில் பண்புகளுக்குக் காட்டுருவாகக் கதைமாந்தரைப் படைத்துக் கதை நிகழ்த்துவதே பொதுவான புராண, காவிய மரபு. சேக்கிழார் படைத்த கதை மாந்தர் பண்புகளுக்கு உருவகமாக மட்டும் படைக்கப்பட்டவர்களல்ல; ஒரு காலப் பகுதியில் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர்கள். குறிப்பாக கி. பி. ௯-ம் நூற்ருண்டுக்குமுற்பட்ட ஐந்து நூற்ருண்டுத் தமிழக சமூக நிலையின் வகைமாதிரியான பிரதிநிதிகள்; "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞா"னத்தினைப் பெற்றுப் பலவித இன்னல்களையும் தாங்கி வைராக்கிய பக்தி செலுத்தியவர்கள். சிவனடியார்கள் என்ற வகையில்தான் — சிவபக்தியென்ற நூலிழையில்தான் — இவர்களது வாழ்க்கைச் செய்திகள் புனைந்து தொகுத்துக் கூறப்பட்டுள்ளன வென்ருலும் தமிழக சமூக பண்பாட்டு வரலாற்றை ஆய்வுரீதியில் அணுகுபவர்களுக்கு ஒரு காலக் கண்ணுடிபோல — தொலைநோக்கி போல — அமையும் இச் செய்திகளும் நிகழ்ச்சிகளும் சேக்கிழார் சமூக வரலாற்றுக்கு ஆற்றிய பணியாகக் கொள்ளற் பாலன.

இவ்விரு அடிப்படை அம்சங்களுடன் இலக்கிய வடிவம் என்ற வகையிலும் திருத்தொண்டர் மாக்கதைக்கு தனித் தன்மையுண்டு. தன்னிகரில்லாத ஒரு தலைவனையோ அல்லது தலைவியையோ முதன்மைப் படுத்தி அமையும் ஏனைய காவியங்களைப் போலல்லாமல் இந்நூல் அறுபத்து மூன்று அடியவர்களின் வாழ்க்கையையும் பணியையும் கூறுவது இவர்களின் கதைகளைச் சுந்தரர் என்ற ஒருவரது வரலாற்றை நூலிழையாகக் கொண்டு "முன் நிகழ்ச்சியின் இடைப் பதிவு" Flash back — உத்தியில் அமைத்த சிறப்பு இன்றைய திரைப்பட, புனைகதை உத்திகளுடன் தொடர்புபடுத்திப் பெருமைப்படத்தக்கது.

இத்தகைய சிறப்புக்களைத் தன்னிடத்தே கொண்ட இப்பேரிலக்கியம் இன்றுவரை முழுமையான திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவில்லை. திருத்தொண்டர் பெரிய புராணம் தொடர்பாக அண்மைக்காலம் வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுமுயற்சிகளிற் "பெரும்பாலான அதன் நலன் புனைந்துரைக்கும்" பண்பினவாகவே காணப்படுகின்றன. சமய அறிஞர் பலரும் சேக்கிழார் கூறிய நாயன்மாருடைய வரலாறுகளையே அவர்களது உண்மை வரலாறுகள் என்று கொண்டு தமிழ்ப் பக்தி இயக்கம் பற்றியும் பேசியும் எழுதியும் வருவதை நாம் காண்கிறோம். சமயத் திருநூல்களைப் பக்தி அடிப்படையில் அணுக வேண்டுமேயன்றிப் பகுத்தறிவு நோக்கில் திறனாய்வு செய்யக் கூடாது என்ற மரபுவழி நம்பிக்கை இவர்களது சிந்தனைக்கு எல்லையிட்டு விடுகின்றது.

பகுத்தறிவு நோக்கிலே அணுகுபவர்களான சில திறனாய்வாளர்கள் கூட திருத்தொண்டர் புராணம் கூறும் நிகழ்ச்சிகளும் செய்திகளும் உண்மையில் நிகழ்ந்தவையே என்று கருதி அவை சமயத்தின் கொடிய ஆட்சியை வலியுறுத்துகின்றன என்பதாகக் கருத்துத் தெரிவிக்க முற்படுகின்றனர். சிறுத்தொண்டர் பிள்ளைக்கறி சமைத்ததும் திருநாளைப்போவார் தில்லையில் தீக்குளித்ததுமான வரலாறுகள் இவர்களது கருத்துக்களுக்கு ஆதாரங்களாக அமைகின்றன. தாழ்த்தப்பட்ட சாதியினரான திருநாளைப்போவார் (நந்தனார்) தில்லையுள்புக முயன்று புரட்சி செய்தார். தில்லைவாழந்தணர்கள் அவரைத் தீயிலிட்டுக் கொன்று விட்டனர் என்ற பொருள்பட ஆய்வுக் கட்டுரைகளும் நாடகங்களும் இன்று எழுதப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட இருவகை அணுகுமுறைகளும் "சேக்கிழார் கூறிய செய்திகள் அனைத்தும் உண்மையில் நிகழ்ந்தவை" என்ற ஊகத்தை அடிப்படையாகக் கொண்டவை; அந்த ஊகத்தினடிப்படையில் தமது சமகால நம்பிக்கைக்கும் நோக்கிற்கும் தேவைக்கும் ஏற்ப விளக்கம் தரப் பயன்படுபவை. இந்த ஊகத்தை அடைவதற்குமுன் சேக்கிழாரை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும்

சேக்கிழாரிலே ஒரு பக்தனும் கவிஞனும் சமூக பண்பாட்டறிஞனும் சங்கமமாகியுள்ளனர். சோழ சாம்ராஜ்யத்தில் மிக உயர்ந்த நிர்வாகப் பதவி வகித்த அறிஞனை சேக்கிழாருக்கு தமது சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு பிரதேச மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டம்சங்களையும் அறிந்து கொள்ளப் போதிய வாய்ப்பு இருந்தது. சோழப்பெருமன்னர்கால கல்விச் சூழலும் அரசவைப் புலவர் கூட்டுறவும் சொல்லாட்சித் திறன்மிக்க புலமையை வழங்கியிருந்தன. இந்த இரு அடிப்படைத் தகுதிகளின் மீது சிவபக்தராகிய அவர் உருவாக்க விழைந்தது ஒரு பக்தி இலக்கியம்.

தமக்கு முற்பட்ட சிவனடியார்களின் அடிமைத்திறனும் அதனால் பெற்ற பெரும் பேறும் தொடர்பான வியப்பே அவருள்ளத்திலே விஞ்சிநின்றது. அவர்களது பெருமையைக் கூறும் முகமாகப் அவர்கள் பெற்ற இறையநுபவத்தை பெற விழைந்த ஒரு மெய்யடியார் சேக்கிழார். நூலுக்கு கதைமாந்தராக அமைந்த

நாயன்மார்கள் சேக்கிழாருக்கு நான்கு நூற்றுண்டுகட்கு முற்பட்டவர்கள். இவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகள் முறைப்படி தொகுத்துவைக்கப்பட்டிருந்ததுமல்ல. திருமுறைகளிற் காணப்படும் அகச்சான்றுகளான தகவல்களும் மக்கள் மத்தியில் செவிவழியாகப் பேணப்பட்டு வந்த செய்திகளும் இணைந்து சேக்கிழாரது சொந்தக் கற்பனையில் உருவானவையே நாயன்மார்களின் வரலாறுகள். சில உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பக்தியும் கவிச்சுவையும் பொருந்த சேக்கிழார் பல நாயன்மார்களுக்கு உருவம் கொடுத்துள்ளார். இவ்வரலாறுகளில் உண்மைகள் எத்தனை விகிதம் பக்திசார்ந்த கற்பனை எத்தனை விகிதம் என்பதைப் பகுத்து நோக்க வேண்டியது அவசியம்.

மேலே குறிப்பிட்ட திருநாளைப் போவாரின் கதை, சிறுத்தொண்டர் பிள்ளைக்கறி சமைத்த கதை, இயற்பகை நாயனுர் தம் மனைவியை இறையடியாருக்குக் கையளித்த கதை. திருஞானசம்பதர் சமணரைக் கழுவேற்றிய செய்தி முதலியவை உண்மை நிகழ்ச்சிகள் எனின் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்குப் பெருமை தருவன அல்ல; மாருக நீங்கா வடுவாகவே அமையக் கூடியன. இவற்றின் மூலம் சேக்கிழார் வைராக்கிய பக்தியுணர்வும் வியப்பும் விஞ்சும் வண்ணம் கதைபுனைந்துரைக்க முற்பட்டுள்ளார் என்று கொள்வதன்றி இவை உண்மை நிகழ்ச்சிகளே எனக் கொள்வதற்கில்லை.

காரைக்காலம்மையார் புராணத்தில் புனிதவதியாருக்கும் அவர் கணவன் பரமதத்தனுக்கு மிடையிலான மனவேறுபாடும் சேக்கிழாரால் தெளிவுபடுத்தப்பட்டிலது. பரமதத்தன் இரண்டாவது மாங்கனியைக் கேட்டபோது அதனைச் சிவனடியாருக்கு விருந்து படைத்த உண்மையை ஏன் புனிதவதி முதலில் வெளியிடவில்லை? கற்புடைப்பெண் கணவனிடம் உண்மையை மறைக்கலாமா என்ற வினுவுக்கு விடை என்ன? குடும்ப வாழ்க்கை பொருத்தமாக அமையாதவர்கள் இறைபக்தியில் அமைதி நாடலாம் என்பதை விளக்குவதே சேக்கிழாரின் நோக்கம் என்று கொள்ளலாம். அந்நோக்கத்திற்கேற்ப பரமதத்தனைப் பொருந்தாக் கணவனுக உருவாக்குவதில் சேக்கிழார் கவனம் செலுத்தவில்லை போலத் தெரிகின்றது.

கண்ணப்பர் கண்ணிடந்து அப்பிய போது அது பொருந்தியமை, நாவுக்கரசர் கடல்நீரிற் கல்லில் மிதந்தமை, சம்பந்தர் பூம்பாவையை உயிர்ப்பித்தமை, சுந்தரர் முதலைவாய்ப் பாலனை மீட்டமை முதலிய நிகழ்ச்சிகள் அற்புதங்களின் பாற்படும். சமய உண்மைகளை வலியுறுத்துவதற்கு இத்தகைய இயற்கையிகந்த நிகழ்ச்சிகளைக் கூறுவது அவசியமெனச் சேக்கிழார் கருதியிருக்கலாம். இவற்றை அவர் கூறியுள்ளவாறே கொள்ளமுடியுமா என்பது ஆய்வுக்குரியதாகின்றது.

தேவாரம்பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரது வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தேவார அகச்சான்றுகளுடன் சேக்கிழார் அமைத்துக் கூறியுள்ள சிறப்பு மிகவும் காத்திரமானதொரு முயற்சி. எனினும் இவை தொடர்பாக எழும் சில ஐயங்களையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். திருமருகல் தலத்தில் பாடப்பட்ட

"சடையாயெனுமால் சரணீயெனுமால்
விடையாயெனுமால் வெருவாவிழுமால்
மடையார்குவளை மலரும்மருகல்
உடையாய்தகுமோ இவளுண்மெலிவே"

என்று தொடங்கும் பதிகம் இலக்கியப் பண்பிலே அகப்பொருளமைதி கொண்டது. இறைவனுகிய தலைவனது வரவை எதிர்நோக்கி ஏங்கும் தலைவியின் மெலிவை அவனுக்குத் தோழி கூறுவதாக அமைந்தது இப்பதிகப் பொருள். இப்பதிகத்துக் கானசந்தர்ப்பத்தைச் சேக்கிழார் வேருெரு வகையிற் குறிப்பிடுகிருர். அரவுதீண்டித் தன் நாயகன் இறந்த நிலையில் அழுது புலம்பும் ஒரு மனைவியின் நிலையை

